இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

9 செப்டம்பர் 2026 அன்று, மலேசியாவின் 9 மறைமாவட்டங்களைச் சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்கச் சிபு (Sibu) நகரை வந்தடைந்தனர். இந்நிகழ்வு சிபு கேட்வே (Sibu Gate Away) பகுதியில் சிலுவை வழிபாட்டுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தொடக்கத் திருப்பலியும், சிலுவை பவனியும் நடைபெற்றன.

மலேசிய கத்தோலிக்க மேய்ப்புப்பணி மாநாடு 2026 – யின் தொகுப்பு

நாள் 1: தூய ஆவியாரால் அழைக்கப்பட்டவர்கள்

9 செப்டம்பர் 2026 அன்று, மலேசியாவின் 9 மறைமாவட்டங்களைச் சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்கச் சிபு (Sibu) நகரை வந்தடைந்தனர்.

இந்நிகழ்வு சிபு கேட்வே (Sibu Gate Away) பகுதியில் சிலுவை வழிபாட்டுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தொடக்கத் திருப்பலியும், சிலுவை பவனியும் நடைபெற்றன.

இந்த அர்த்தமுள்ள சிலுவை வழிபாட்டில், கடந்த 18 மாதங்களாக மலேசியா முழுவதிலும் உள்ள பங்குகளில் வலம் வந்த 9 மறைமாவட்டங்களின் 9 சிலுவைகளும், கிறிஸ்துவில் இறைமக்களின் ஒற்றுமையின் அடையாளமாக ஒரே சிலுவையாக மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டன. கனமழை பெய்தபோதிலும், இறைமக்கள் தளராது மழையிலேயே நின்று பேரார்வத்துடன் திவ்ய திருவிருந்து வழிபாட்டில் பங்கேற்றனர்.

"நமது மாநாட்டின் சிலுவையானது, உலகை வென்ற நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வெற்றியையும், அவர் நம்மைத் தந்தையாகிய கடவுளோடு ஒப்புரவாக்கி தூய ஆவியாரால் நம்மை ஒன்றுபடுத்துவதையும் குறிக்கிறது. இந்தச் சிலுவை இப்போது பாவத்தின் மீதான வெற்றி, மன உறுதி, வீழ்ந்த பின் மீண்டும் எழுந்திருத்தல் ஆகியவற்றின் அடையாளமாகத் திகழ்கிறது. இது வாழ்வு, நம்பிக்கை, மன்னிப்பு மற்றும் ஒப்புரவாக்குதலைக் குறிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, நமது இயேசு என்றும் நம்முடன் இருக்கிறார்."

— பேராயர் சைமன் போ (தொடக்கத் திருப்பலி மறைவுரை)

மலேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவரான பேராயர் சைமன் போ, 2025 மே மாதம் தொடங்கப்பட்ட 9 சிலுவைகளின் ஆன்மீகப் பயணத்தை நினைவுகூர்ந்தார். தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் மறைமாவட்ட மக்களின் காயங்களையும், நம்பிக்கைகளையும் சுமந்து சென்ற அந்தச் சிலுவைகள், இப்போது இம்மாநாட்டில் ஒன்றாகக் கூடியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டினார்.



பிற்பகல் அமர்வு: மலேசியாவின் கலாச்சார வளமையோடு பிரதிநிதிகள் அனைவரும் 'ஒரே படகில்' என்ற கருத்தில் கூடினர். ஓய்வுபெற்ற பேராயர் ஜான் ஹா, "மலேசியத் திருஅவையாக நாம் எவ்வாறு இணைந்து முடிவெடுத்துச் செயல்பட வேண்டும்?" எனும் தலைப்பில் உரையாற்றினார்.

நாட்டின் நல்வாழ்வுக்குக் கத்தோலிக்கத் திருஅவை எவ்வாறு பங்களிக்க முடியும், தூய ஆவியார் இப்போது திருஅவைக்கு என்ன சொல்கிறார் என்பதைப் பிரதிநிதிகள் குழுவாக அமர்ந்து ஆவியானவரின் வழிநடத்துதலில் (Conversation in the Spirit) திறந்த மனதோடு கலந்துரையாடினர்.

இரண்டாம் நாள் மாலை ஜெபம் (Vespers), திருப்பலி மற்றும் கோத்தா கினபாலு, கோலாலம்பூர், கூச்சிங் மாமறைமாவட்டப் பிரதிநிதிகளின் கலைநிகழ்ச்சிகளோடு நிறைவுற்றது.

"தீபகற்ப மலேசியா, சபா, சரவாக் ஆகிய மண்டலத் திருஅவைகள் ஒன்றுக்கொன்று உண்மையான அன்போடு அக்கறை காட்டும் 'ஒரே ஆவியின் ஒன்றிப்பில்' தான், நாம் ஒரே மலேசியத் திருஅவை எனும் உணர்வு அடங்கியுள்ளது."





நாள் 2: ஒரே படகில், இணைந்து...

இரண்டாம் நாள், "ஒன்றிப்பின் ஆவியில் இணைந்து கொண்டாடுவோம்" எனும் தலைப்பில் தொடங்கியது. மலேசியத் திருஅவையின் அழகையும் தனித்துவத்தையும் சிறப்பிக்கும் வகையில், பிரதிநிதிகள் அனைவரும் தங்களின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து பெருமகிழ்ச்சியோடு பங்கேற்றனர்.

மாநாட்டின் அதிகாரப்பூர்வ தொடக்க விழா மலேசிய தேசிய ஒருமைப்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ ஆரோன் அகோ தகேங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு முன்னதாக, கார்டினல் டத்தோ செபாஸ்டியன் பிரான்சிஸ் ஜெபம் செய்து ஆசி வழங்கினார்.



நாள் 3: "வலையைப் போடுங்கள்" (யோவான் 21:6)

மூன்றாம் நாள் 'செவிமடுத்தல்' எனும் சிந்தனையோடு தொடங்கியது. காலை அமர்வில், மாநாட்டின் முக்கியப் பொருள்களில் ஒன்றான 'குடும்பம்' குறித்து ஆராயப்பட்டது.

கார்டினல் பப்லோ விர்ஜிலியோ டேவிட் அவர்களின் பகிர்வு மூலம், இன்றைய குடும்பங்கள் எதிர்கொள்ளும் நிஜ சவால்கள் குறித்துப் பிரதிநிதிகள் சிந்தித்தனர். பல இனங்கள் வாழும் நமது மலேசிய நாட்டில், வறுமை மற்றும் பல்வேறு சமூக-பொருளாதாரச் சூழல்களில் வாழும் குடும்பங்களின் சவால்களைத் திருஅவையாக நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் எனும் கேள்வி எழுப்பப்பட்டது.

பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களின் குரலுக்கு அன்புடனும் இரக்கத்துடனும் செவிமடுக்கவும், அவர்கள் பயமின்றித் தங்கள் வாழ்வின் சவால்களைப் பகிர்ந்து கொள்ளப் பாதுகாப்பான சூழலை உருவாக்கவும் திருஅவை அழைக்கப்படுகிறது.

பிற்பகல் அமர்வு: டாக்டர் பிரிட்ஜெட் வெல்ஷ், "இன்றைய சமுதாயம் மற்றும் இறைவனின் படைப்புகள் மீதான நமது பொறுப்பு" எனும் தலைப்பில் உரையாற்றினார். பழங்குடியின மக்களின் வறுமை, சிறுவர் ஊட்டச்சத்து குறைபாடு, சமூகப் பிரிவினைகள், சுற்றுச்சூழல் சீர்கேடு, கல்வியின்மை மற்றும் பொருளாதார வாய்ப்புகளின்மை போன்ற மலேசியாவின் சிக்கலான சவால்களை எதிர்கொள்ளச் சமுதாயத்திற்கு அதிகாரமளிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

கல்வி, சமயங்களுக்கிடையேயான உரையாடல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலம் திருஅவை இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. கலந்துரையாடலுக்குப் பின், கிறிஸ்து நற்செய்தியை எதிர்காலத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லத் திருஅவை செய்ய வேண்டிய நடைமுறைச் செயல்பாடுகள் குறித்துப் பிரதிநிதிகள் ஆலோசித்தனர்.



"கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராமல் வரம்பு மீறிச் செல்வோர் கடவுளைக் கொண்டிருப்பதில்லை." 2 யோவான் 9







இந்நாள் மாலை ஜெபம், திருப்பலி மற்றும் மலாக்கா-ஜோஹர், மீரி, சாண்டாக்கான் மறைமாவட்டங்களின் கலைநிகழ்ச்சிகளோடு நிறைவடைந்தது.

"நம் கண்களுக்குத் தெரியாமல் ஆயிரக்கணக்கான நல்ல சமாரியர்களும், நற்செயல்களும் நம்மைச் சுற்றி நடந்துகொண்டுதான் இருக்கின்றன. நாம் கூர்ந்துக் கவனித்தால் தூய ஆவியாரின் செயல்பாட்டை உணர்ந்து கொள்ள முடியும். நாம் சிறியவர்கள் என்று நினைக்கலாம்; ஆனால் 'காந்தாரி மிளகாய்' (Cilipadi) அளவில் சிறியதாக இருந்தாலும், அதை ஒன்றாகச் சேர்த்து சம்பால் (Sambal) அரைக்கும் போது அது தரும் காரமும் சுவையும் தனித்துவமானது. அதுபோல, ஒவ்வொரு பங்காகவும், மறைமாவட்டமாகவும் நாம் ஒன்றிணையும் போது பெரும் மாற்றத்தை உருவாக்க முடியும்."

— டாக்டர் பிரிட்ஜெட் வெல்ஷ்



நாள் 4 & நிறைவு நாள்: அனுப்பப்படுதல்

4 நாட்கள் கொண்டாட்டங்கள், செவிமடுத்தல் மற்றும் கூட்டொருமைப் பயணத்திற்குப் பிறகு, தூய ஆவியாரின் வழிகாட்டுதலால் பெறப்பட்ட ஆன்மீகக் கனிகள் (Fruits of the Spirit) சமர்ப்பிக்கப்பட்டன.

இன்றைய திருஅவை நான்கு சுவர்களுக்குள் முடங்கிவிடக் கூடாது. மலேசியத் திருஅவையின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு இந்த ஆன்மீகக் கனிகளே அடிப்படையாகும்.

- ஒற்றுமை மற்றும் அமைதியின் பாலமாகத் திருஅவை திகழ்தல்
- குடும்பங்கள் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு உதவுதல்
- சுற்றுச்சூழலைப் பராமரித்தல்
- நவீன தொழில்நுட்பத்தைக் கவனமாகக் கையாளுதல்
- திருஅவையின் நம்பிக்கையாக விளங்கும் இளைஞர்களை உயர்வாக மதித்தல்

ஆகியவை முக்கியத் தூண்களாக அடையாளப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நற்கருணை ஆராதனையில், பிரதிநிதிகள் தூய ஆவியாரின் வழிகாட்டுதலுக்கு நன்றி செலுத்தினர்.

அனுப்பிவைக்கும் திருப்பலி (Sending Forth): மாநாட்டின் நிறைவாக, பிரதிநிதிகள் அனைவரும் கிறிஸ்து நற்செய்திப் பணியைத் தொடரத் தங்களது மறைமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆயர்கள் தங்கள் மேய்ப்புப்பணி செய்தியில், மாநாட்டில் பெறப்பட்ட தூண்டுதல்களின்படி வாழ்ந்து காட்ட அழைப்பு விடுத்தனர்.

மாநாட்டின் சிலுவை, கிங்வுட் ஹோட்டலிலிருந்து 'திரு இருதயப் பேராலயத்திற்கு' (Sacred Heart Cathedral) பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. 18 மாதங்களுக்கு முன்பு கோத்தா கினபாலுவில் இந்த ஆன்மீகப் பயணத்தைத் தொடங்கிய இளைஞர் இயக்கமே இப்பவனியையும் வழிநடத்தியது.

காலப் பேழை (Time Capsule):

பேராயர் சைமன் போ தலைமையில் ஒரு சிறப்பான நிகழ்வு நடைபெற்றது. தற்போதைய கத்தோலிக்கச் சமூகத்தின் பிரார்த்தனைகள், நம்பிக்கைகள் மற்றும் செய்திகள் அடங்கிய 'காலப் பேழை' (Time Capsule) அந்தச் சிலுவைக்குள் வைக்கப்பட்டது. இது அடுத்த தேசிய மாநாட்டின் போது திறக்கப்படும்.

நிறைவுத் திருப்பலியைத் தலைமைதாங்கி நடத்திய கர்டினல் செபாஸ்டியன் பிரான்சிஸ், திருமுழுக்கு (Baptism) வழியாக நாம் அனைவரும் இறைவனால் அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளோம் என்பதை நினைவூட்டினார். உறவுகள், செயல்பாடுகள், பிணைப்புகள் (Relationships, Processes, and Bonds) ஆகிய மூன்று பரிமாணங்களில் தூய ஆவியார் திருஅவையை வழிநடத்துகிறார் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தூய ஆவியாரின் துணையோடு, "ஆழத்திற்குப் படகைத் தள்ளிச் செல்லவும்" (Duc in Altum), ஆசிய மற்றும் உலகத் திருஅவையோடு இணைந்து ஒரே மலேசியத் திருஅவையாக நம்பிக்கையோடு முன்னேறிச் செல்லவும் நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம்.

தொகுப்பு: பெர்சியஸ் ஜேம்ஸ்

MPC 2026—ஒரு நிறைவு அல்ல, ஒரு புதிய தொடக்கம்

"ஆகையால், நான் உங்களை அனுப்புகிறேன்" என்ற கருப்பொருளுடன் சரவாக்கின் சிபுவில் நான்கு நாட்கள் ஒன்றுகூடி, செபத்திலும், பகிர்விலும், செவிமடுத்தலிலும், சகோதரத்துவத்திலும் MPC 2026-ஐ நிறைவு செய்தோம். வெவ்வேறு மறைமாவட்டங்கள், வெவ்வேறு மொழிகள், வெவ்வேறு பணித்தளங்கள், வெவ்வேறு அனுபவங்கள் — ஆனால் ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கிறிஸ்து, ஒரே திரு அவையாய் ஒன்றிணைந்தோம். இந்த ஒன்றுகூடல் நமக்கு பல நினைவுகளைத் தந்தது. அதைவிட முக்கியமாக, நமது அழைப்பையும் பொறுப்பையும் மீண்டும் நினைவூட்டியது.

நாம் ஒருவரையொருவர் சந்தித்தோம், ஒருவரையொருவர் செவிமடுத்தோம், நமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டோம், ஒன்றாகச் செபித்தோம், ஒன்றாகச் சிந்தித்தோம்.இப்போது நாம் மீண்டும் நமது மறைமாவட்டங்களுக்கும், பங்குகளுக்கும், சமூகங்களுக்கும் திரும்புகிறோம். இப்போது தான் நமது பணி தொடர்கிறது. ஆயர்களின் மேய்ப்புச் செய்தி, கர்தினாலின் சிந்தனைகள், தூய ஆவியானவரின் வழிநடத்துதல், சிலுவையின் பயணம் — இவை அனைத்தும் நமக்கு ஒரே செய்தியை நினைவூட்டுகின்றன: நாம் அழைக்கப்பட்டவர்கள், நாம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், நாம் அனுப்பப்பட்டவர்கள். திருமுழுக்கின் மூலம் நாம் பெற்ற அழைப்பு, ஒரு நிகழ்வுடன் முடிவடைவதல்ல. அது நமது அன்றாட வாழ்விலும், குடும்பத்திலும், பணியிலும், திரு அவைப் பணியிலும் தொடர்ந்து வெளிப்பட வேண்டிய அழைப்பாகும்.

உறவுகள் — செயல்முறைகள் — பிணைப்புகள்

Synodal பயணம் நமக்கு மூன்று முக்கியமான பரிமாணங்களை நினைவூட்டுகிறது. தூய ஆவியானவரின் வழிகாட்டுதலுடன், கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று, "Duc in Altum — ஆழத்திற்குச் செல்லுங்கள்" என்ற அழைப்புடன் நமது வலைகளை மீண்டும் வீசுவோம்.



நாம் எங்கு அனுப்பப்பட்டிருக்கிறோமோ அங்கே கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவோம். நாம் எங்கு பணியாற்றுகிறோமோ அங்கே ஒற்றுமையை உருவாக்குவோம். நாம் எங்கு இருக்கிறோமோ அங்கே திரு அவையின் சாட்சிகளாக இருப்போம். ஒரே திரு அவையாக முன்னேறுவோம்.

"ஆழத்திற்குச் சென்று, உங்கள் வலைகளை மீண்டும் வீசுங்கள்." — லூக்கா 5:4. கிறிஸ்துவுக்காகவும் திரு அவைக்காகவும் மக்களுக்காகவும் ஆழத்திற்குச் செல்வோம்.

அன்புடனும் அர்ப்பணிப்புடனும்,

JOHNSAN SINNAPPAN
HFC ULU TIRAM, MPC 2026 பிரதிநிதி

பொதுக்காலம் 26-ம் ஞாயிறு

27 செப்டம்பர் 2026

எசேக்கியேல் 18:25-28; பிலிப்பியர் 2:1-11; மத்தேயு 21:28-32

இன்று ஆண்டின் பொதுக்காலத்தில் 26-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். மனமாற்றத்துடன், தாழ்மையுடன், கடவுளின் திருவுளத்தைச் செயலால் நிறைவேற்ற நாம் அழைக்கப்படுகிறோம். இன்றைய மூன்று வாசகங்களையும் கூர்ந்து வாசித்தால், எசேக்கியேல் இறைவாக்கினர் கடவுள், நமது கடந்த காலத்தை மட்டும் பார்க்காமல், நாம் மனந்திரும்பி நீதியின் வழிமுறையைத் தேர்ந்து வாழ்கிறோமா என்பதைக் காண்கிறார் எனவும், தீய வழியை விட்டுத் திரும்புகிறவர் வாழ்வைப் பெறுகிறார் என்றும் அறிவுறுத்தப்படுகிறோம்.

அடுத்து வரும் இரண்டாம் வாசகத்தில், கிறிஸ்துவைப் போல தாழ்மையுடன், சுயநலத்தை விட்டுவிட்டு, பிறருடைய நலனையும் கருத்தில் கொண்டு வாழ வேண்டும் என்றும் இயேசுவின் தாழ்மையும் கீழ்ப்படிதலும் நமக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும் எனவும் தூய பவுல் நினைவூட்டுகிறார்.

தொடர்ந்து இன்றைய நற்செய்தியில், இரண்டு மகன்களின் உவமையில், முதலில் மறுத்தாலும் பின்னர் மனம்மாறி தந்தையின் விருப்பத்தைச் செய்ய முற்பட்டவனே தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினான் என்று முடிக்கிறார் ஆண்டவர். முதல் மகன் வரி வசூலிப்பவர்களையும் விலைமாதர்களையும் பிரதிநிதிப்பதாக ஏற்கலாம். இவர்கள் ஆரம்பத்தில் கடவுளுடைய சட்டத்தை மீறியவர்கள்; ஆனால் திருமுழுக்கு யோவானும் இயேசுவும் அறிவித்த போதனையைக் கேட்ட பிறகு மனம் மாறி மனந்திரும்பியவர்கள். இரண்டாவது மகன் தலைமை குருக்களையும் மூப்பர்களையும் பிரதிநிதிப்பதாகப் பொருள் கொள்ளலாம். இந்த உவமையைச் சொன்ன பிறகு, இயேசு இவ்வாறு அறிவிக்கிறார்: "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: வரி வசூலிப்பவர்களும் விலைமாதர்களும் உங்களுக்கு முன்பே இறையாட்சிக்குள் செல்கிறார்கள்" என்றார்.

"ஆம்" என்று சொல்லிவிட்டு செய்யாமல் இருப்பது மேலானதா? அல்லது முதலில் மறுத்தாலும் பின்னர் ஓடிப் போய் செய்து முடிப்பது மேலானதா? இக்கேள்வி நம்மில் எழ வேண்டும். முதல் மகன் ஆரம்பத்தில் தந்தையின் வார்த்தையை மறுத்தாலும், பின்னர் தனது தவறை உணர்ந்து மனம் மாறினான். இதுவே மனந்திரும்புதலின் அழகு. கடந்த காலத்தில் நாம் எவ்வாறு வாழ்ந்தோம் என்பது இறுதியானது அல்ல; இன்று நாம் மனம் மாறி கடவுளிடம் திரும்ப வேண்டும் என்பதே இன்றியமையாத எதிர்ப்பார்ப்பு.

நிறைவாக, அன்னை மரியாவைப்போல், நமது வார்த்தைகள் மட்டுமல்ல, நமது வாழ்க்கையே கடவுளுக்கான பதிலாக இருக்க வேண்டும். இன்றைய நற்செய்தியுடன் இணைத்துப் பார்த்தால், கடவுளுக்குப் பணி செய்வது வெறும் வார்த்தைகளில் "ஆம்" என்று சொல்வது அல்ல; அந்த "ஆம்" நமது வாழ்க்கையிலும் செயல்களிலும் வெளிப்பட வேண்டும் என்பதாகும்.

ஆர்.கே.சாமி, சிரம்பான்

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015